## தமிழ்நாட்டின் சுழல் இரட்டையர்கள்

# வாஷிங்டன் சுந்தர் - வருண் சக்கரவர்த்தி மேலும் பல போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




சென்னை, மார்ச் 17-

தமிழ்நாட்டின் சுழல் இரட்டையர்கள் வாஷிங்டன் சுந்தர் மற்றும் வருண் சக்ரவர்த்தி ஆகியோர் மேலும் பல போட்டிகளில் வெற்றிக்கு இட்டுச் செல்லும் வகையில் பந்து வீசவும், பல பெருமைகளை அடையவும் இருவரையும் வாழ்த்துகிறேன் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**தமிழ்நாட்டின் சுழல் இரட்டையர்கள் வாஷிங்டன் சுந்தர் மற்றும் வருண் சக்ரவர்த்தி ஆகியோருடன் மறக்கவியலாத் தருணங்கள்.**

**விடாமுயற்சி, ஒழுக்கம், தன்னம்பிக்கை ஆகியவற்றால் செதுக்கப்பட்ட அவர்களது பயணம் குறித்து அவர்களுடன் உரையாடினேன்.**

**மேலும் பல போட்டிகளில் வெற்றிக்கு இட்டுச் செல்லும் வகையில் பந்து வீசவும், பல பெருமைகளை அடையவும் இருவரையும் வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலை சிறப்பான முறையில் எதிர் கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர் - திருப்பெரும்புதூர் - பல்லாவரம் - தாம்பரம் - செங்கல்பட்டு - திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள வாக்குச் சாவடிகளில் தேர்தல் பணியாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA-2) மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம், சட்டமன்றத் தொகுதி வாரியாக கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 18.03.2026 புதன் | மாலை 4.00 மணி | ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி | மாவட்டக் கழக அலுவலகம், கத்திப்பாரா மேம்பாலம் அருகில் |
| 19.03.2026 வியாழன் | காலை 9.00 மணி | திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி | கணேஷ் மகால், காலவாக்கம் |
| | மாலை 4.00 மணி | திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி | கல்யாணி மண்டபம், மாங்காடு |
| 20.03.2026 வெள்ளி | காலை 9.00 மணி | பல்லாவரம் சட்டமன்ற தொகுதி | வசந்தம் திருமண மண்டபம், பல்லாவரம் |
| | மாலை 4.00 மணி | செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி | என்.பி.ஆர். திருமண மண்டபம் நந்திவரம் – கூடுவாஞ்சேரி |
| 21.03.2026 சனி | காலை 9.00 மணி | தாம்பரம் சட்டமன்ற தொகுதி | வாசுதேவா திருமண மண்டபம், சேலையூர், தாம்பரம் |

எனவே, அந்தந்த தொகுதி வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA-2) மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்களை, அந்தந்த தொகுதியில் அடங்கியுள்ள அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், இணைந்து சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டங்களில் வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA-2) மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்து, இத்தொகுதி அளவிலான கூட்டங்களை மிகவும் எழுச்சியான முறையில் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:- சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்கப்பணி

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் - வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (17.03.2026 - செவ்வாய்கிழமை) மாலை 5.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## ரயில்வே: சொற்ப நிதி ஒதுக்கீடு

# 4.5 லட்சம் கோடி ரூபாய் கடன் மோசமான உள்கட்டமைப்பு!

### மக்களவை உரையில் ஒன்றிய அரசின் மீது கே.இ.பிரகாஷ் எம்.பி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 17-

மக்களவையில் நடைபெற்ற ரயில்வே மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ரயில்வே துறையில் ஒன்றிய அரசு நிகழ்த்தி வரும் நிர்வாகச் சீர்கேடுகளையும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதையும் கடுமையாக சாடிப் பேசினார். தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் தொடர் போராட்டம் நடத்தி, தமிழ்நாடு தனது உரிமைகளை மீட்கும் என்று அவர் சூளுரைத்தார்.



ஒன்றிய நிதியமைச்சரின் பட்ஜெட் உரையில் 'ரயில்வே' என்ற சொல்லே இடம்பெறாதது இந்த அரசின் அலட்சியத்தை உணர்த்தும் ஆதாரம் என்று குறிப்பிட்ட அவர், ரயில்வே உள்கட்டமைப்புச் செலவுகள் 66% உயர்ந்துள்ள நிலையில், நிதி ஒதுக்கீடு வெறும் 8.5% மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டினார். மேலும், ரயில்வே துறையை 4.5 லட்சம் கோடி ரூபாய் கடனில் தத்தளிக்க விட்டு விட்டு, ரயில் நிலையங்களில் சாதனைப் பதாகைகளை வைப்பது அர்த்தமே இல்லாதது என்று அவர் ஒன்றிய அரசை சாடினார்.

சாமானிய மக்கள் பயன்படுத்தும் ஸ்லீப்பர் மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகளில் இடவசதி வெறும் 1.2% மட்டுமே உயர்ந்துள்ளதால் மக்கள் கழிவறை வாசலில் அமர்ந்து பயணிக்கும் அவலநிலை தொடர்வதாக அவர் குற்றம் சாட்டினார். 'டிஜிட்டல் இந்தியா' என்று நாடகமாடும் ஒன்றிய அரசு, காகிதப்பதிவேட்டில் புகார் எழுதும் வழக்கம் உட்பட ரயில்வேயை இன்னும் பழங்காலத்திலேயே வைத்திருப்பதாகவும், உணவின் தரம் குறித்த புகார்களை தொடர்ச்சியாக தட்டிக்கழிப்பதாகவும் அவர் காட்டமாக விமர்சித்தார்.

ஈரோடு தொகுதி மற்றும் கொங்கு மண்டலத்தின் நீண்டகால ரயில்வே கோரிக்கைகளை முன்வைத்து பேசிய திரு. கே.இ.பிரகாஷ் எம்.பி அவர்கள், குமாரபாளையம் வழியாக ஈரோடு நாமக்கல் இடையே நேரடி ரயில் பாதை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதேபோல், கோயம்புத்தூர் ஈரோடு இடையிலான MEMU ரயிலை கரூர் மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை நீட்டிக்க வேண்டும் என்றும், ஈரோடு -திருப்பூர் வழித்தடத்தில் கூடுதல் பயணிகள் ரயில்களை இயக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்க்கடவுள் முருகனின் மீது திடீர் பாசம் வந்து வேல் யாத்திரை உள்ளிட்ட விளம்பரங்களை காட்டும் ஒன்றிய அரசு, ஈரோடு - பழனி நேரடி ரயில் சேவையைத் தொடங்காதது பக்தர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் செயல் என்று அவர் சாடினார். ரயில்வே துறையும் தேசிய நெடுஞ்சாலைத் துறையும் ஒருங்கிணைவு இல்லாமல் திட்டங்களை முடக்குவதாக குறிப்பிட்ட அவர், வெள்ளக்கோயில் சங்ககிரி ROAD OVER BRIDGE உள்ளிட்ட நிலுவையில் உள்ள பணிகளுக்கு உடனடி அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது தாமதமில்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் 'எம்.பி-க்கள் கோரிக்கை தீர்வுக் குழு' அமைக்க வேண்டும் என்றும், இந்தியாவின் இன்றியமையாத ரயில்வே துறையில், அலட்சியம், நிர்வாகக் குளறுபடிகள் மற்றும் மாநிலங்கள் மீது பாகுபாட்டுக்கு இடம் கொடுக்காமல் ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வருகிற 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வென்று ஒன்றிய அரசிடம் போராடி தமிழ்நாட்டின் உரிமையை மீட்போம் காப்போம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு! என்று கூறி, அவர் தனது உரையை நிறைவு செய்தார்.



ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் செவ்வாய்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது அப்போது திமுகவினர் மற்றும் பெண்கள் சிலிண்டருக்கு மாலை அணிவித்தும், பாடை கட்டியும், ஒப்பாரி வைத்தும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மகாதேவன் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்

## பணவீக்கத்தை கணக்கில் கொண்டு, மாநில வாரியான

# பாலின அடிப்படையிலான ஊதியத் தரவுகளை வெளியிடுமா ஒன்றிய அரசு?

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்!



புதுடெல்லி, மார்ச் 17-

அதாவது, தற்காலிக/சாதாரண (CASUAL) தொழிலாளர்கள் மற்றும் சுய தொழில் புரிபவர்களுக்கு பணவீக்கம் கணக்கில் கொண்ட உண்மை ஊதியத் தொடர் (INFLATION-ADJUSTED REAL WAGE SERIES) குறித்த விவரங்கள் அமைச்சரின் பதிலில் இடம்பெறவில்லை என்றும், அவை பாலின அடிப்படையிலான தரவுகளுடன் வழங்கப்பட வேண்டும் என்றும் மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் குறிப்பிட்டார்.

எனவே, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான மாநில வாரியான, பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட, பணவீக்கம் சரிசெய்யப்பட்ட உண்மை ஊதியப் தரவுகளை சாதாரண தொழிலாளர்கள் மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்காக மத்திய அரசு வெளியிடுமா என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அமைச்சர் மன்சுக் மாண்டவியா பதிலளிக்கையில், ஊதியப் பணியாளர்கள் (REGULAR WORKERS), தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் குறித்த தரவுகள் அரசால் கால காலம் காலமாக சேகரிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

மேலும் நாட்டில் வேலைவாய்ப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், வேலை இழப்பு குறைந்து வருவதாகவும் அவர் கூறினார். நாட்டின் பொருளாதாரம் வளரும்போது வேலை வாய்ப்பும் உருவாகும்; தேவை அதிகரித்தால் உற்பத்தி உயரும்; அதன் மூலம் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்று மத்திய அமைச்சர் விளக்கம் .

அதன் விளைவாக, நாட்டில் சுயதொழில் புரிபவர்களின் விகிதம் 2017 -18ஆம் ஆண்டில் 52 சதவீதமாக இருந்தது; அது உயர்ந்து 58 சதவீதமாகியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல், சாதாரண தொழிலாளர்களின் விகிதம் 2017--18ஆம் ஆண்டில் 24 சதவீதமாக இருந்த நிலையில், அது 19 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், இதன் காரணம் தொழிலாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது நிலையான வேலை வாய்ப்புகளுக்குள் மாறியிருப்பது தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்பு உருவாக்கம் அதிகரித்ததையும், சமூகப் பாதுகாப்பு விரிவடைந்ததையும் காட்டுகிறது என்று அமைச்சர் பதிலளித்தார்.

## மயிலை கிழக்கு – மேற்குப் பகுதி சார்பில்

# பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA 2 ஆலோசனை கூட்டம்!

### வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, மார்ச். 17-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு / மேற்கு பகுதி திமுக சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA 2 ஆலோசனை கூட்டம் இன்று (17032026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் முத்தமிழ் பேரவை, ராஜா அண்ணாமலைபுரத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தலைமையில் மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி. லெனின், பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

ஆகவே இக்கூட்டத்திற்கு 124வது அ வட்டக் கழகத்தை சார்ந்த பாக பொறுப்பாளர்கள், BLA2 அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

124 அ வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வின்னர் ..!

**ஏ**ப்ரலில் ஒலிக்கும்
மந்திரங்கள்

எண்ணிச்
சொல்லும்
எந்திரங்கள்...

“எவரும் உமக்கு
நிகரில்லை”

அத்தனை
பேரும்
ரன்னர்...

அண்ணனே
நீ மட்டுமே
வின்னர்...

உழைத்ததில்
First cm

உச்சங்கள்
தந்ததில்
Best cm




உலகத்
தமிழினமே
வாழ்த்திட
2026ன் next cm

“முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின் எனும் நான்”.

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகு ராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்